**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 85-2019**

| | | | | |
|---|---|---|---|---|
| Deposition of LW 4 | | | Examined as : PW 3 | |
| Name | : ராஜேஷ் @ ராஜேஷ் கண்ணா | | Defence | : |
| Father/Husband Name | : முத்துகுமரசாமி | | Court | : |
| Village | : மேலப்பெரம்பூர் | | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : 48/2026 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 07.02.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர் இல்லை. (u/s 355 of BNSS petition filed and allowed)

**முதல் விசாரணை:-**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 01.15 மணியளவில் மேலப்பெரம்பூர் உடையார் தெருவில் உள்ள எனது வீட்டிற்கு எதிர் திசையில் 3 வீடுகள் தள்ளி உள்ள பேபி கமலா என்பவரது செயின் திருடு போனது சம்பந்தமாக பெரம்பூர் போலிசார் அன்றைய தினம் இரவு 01.40 மணியளவில் அங்கு வந்து விசாரித்து படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைபற்றுதல் மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் என்னுடையது எதுவும் இல்லை.

**அரசு தரப்பு சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

கடந்த 27.06.2017ம் தேதி இரவு 12.30 மணியளவில் பெரம்பூர் போலிசார் சிவகுரு என்பவரது வீட்டில் திருடு போனது சம்பந்தமாக அங்கு வந்து விசாரணை செய்து பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், பேபி கமலா என்பவது வீட்டின் அருகில் செடி மறைவில் கிடந்த அருவாளை மற்றும் Driving License ஆகியவற்றை கைபற்றுதல் மகசர் தயார் செய்து கைபற்றியதாகவும் அதில் என்னிடமும் குமார் என்பவரிடமும் சாட்சி கையொப்பம் செய்ததாக கூறிவிட்டு தற்போது பார்வை

மகசர் மற்றும் கைபற்றுதல் மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் என்னுடையது எதுவும் இல்லை என கூறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் திருடு போன தெருவில் உள்ள முக்கிய நபர என்பதால் தெரியாத சம்பவத்தை தெரிந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.